**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று, மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகாரசபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால்,

அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபை அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமத்தின் தொடர்புகளுடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்றின் எஞ்சிய மதிப்பு மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் ஒவ்வொரு வருடாந்த காலத்தின் முடிவிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டியபோதிலும் 2021 திசெம்பர் 31 இல் கிரயம் ரூபா 731.3 மில்லியன் ஆன சொத்துக்கள் முழுமையாகத் தேய்மானமிடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டவாறு | 2022 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் சமர்ப்பிக்கப்படும் போது, தொடர்புடைய கணக்குகளில் சீராக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன் இச்சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 90 ஆம் பந்தியின் பிரகாரம் மீள்மதிப்பு தொடர்பான தகவல்கள் வெளியிடப்படாததாலும், மீள்மதிப்பு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான அட்டவணைகளை பராமரிக்காததாலும், 10 வருட காலப்பகுதியில் காணப்படுகின்ற ரூபா 9.3 மில்லியன் மிகை மீதியின் சரியான தன்மையை உறுதி செய்வதற்கு முடியவில்லை. | இந்த பிழையானது, மீள்மதிப்பீட்டு மிகையை காலக்கழிவு செய்வதன் மூலம் திரட்டப்பட்ட நிதிக்கு மாற்றுவதன் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான தேய்மானம், தேய்மானச் செலவில் ஏற்பட்ட குறைவாகக் கருதி, அந்தச் சொத்துகளின் தேய்மானம் மொத்த தேய்மானச் செலவில் கழிக்கப்படுவதால், ஆண்டின் தேய்மானச் செலவு ரூபா 4.8 மில்லியன் குறைவாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளதால் நிதிநிலை அறிக்கைகளில் ஆண்டுக்கான மிகை அந்த அளவினால் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. | உடன்படுகின்றேன். கணக்கீட்டுத் தவறு தற்போது திருத்தப்படுவகற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது. | தேய்மானச் செலவு உாயி முறையில் கணக்கிடப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை நிர்மாண நடவடிக்கைகள் முடிக்கப்பட்டு தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்ற கிரயம் ரூபா 128 மில்லியன் ஆன 05 நிர்மாண செயற்திட்டங்கள் 2021 திசெம்பர் 31 இல் நிதிக்கூற்றுக்களில் மூலதனமாக்கப்படாது முடிவுறா வேலை மீதியாக காட்டப்பட்டிருந்தது. இதன காரணமாக பயன்படுத்தப்படுகின்ற இச்சொத்துக்களுக்கு ரூபா 3 மில்லியன் ஆன பெறுமானத்தேய்வு | 04 செயற்திட்டங்கள் மூலதனமாக்கப்படவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். மிகுதி செயற்திட்டங்களின் இறுதி பற்றுச்சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் வேலை நிறைவுச் சான்றிதழ் பெறுவதற்கு மதியுரை நிறுவனத்துடன் பல கலந்துரையாடல்களின்போது விண்ணப்பித்தும் ஆனால் இன்னும் | வேலை முடிவுறுத்தும் சான்றிதழ் தாமதமின்றி பெறப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படுவ தற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சமர்ப்பிக்கப்படவில்லை. எனவே, இத்திட்டத்தின் கட்டுமானப் பணிகள் தற்போது நிறைவடைந்துள்ள நிலையில், இறுதி பற்றுச்சீட்டுக்களுக்கான கட்டணம் செலுத்தப்படவில்லை. | |
| (இ) | 2021 ஆம் ஆண்டில், அதிகாரசபையால் பெறப்பட்ட மூலதன மானியம் ரூபா 1.7 மில்லியன் பயன்படுத்தப்பட்ட கணக்கியல் கொள்கைக்கு மாறாக மீண்டெழும் மானியங்களாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டதால் வருமானம் அத்தொகையால் மிகைப்படுத்தப்பட்டும் மற்றும் மூலதன மானியங்கள் அத்தொகையால குறைவாகவும நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. | உடன்படுகின்றேன். 2022 ஆம் வருடத்தில நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படும்போது இத்தவறு திருத்தப்படுவகற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 8 வருட காலமாக காணப்படுகின்ற பெற வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி ரூபா 3.3 மில்லியன் மற்றும் 2019 அம் ஆண்டிற்கு முந்திய கொடுப்பனவிற்கான பொறுப்பொன்றல்லாத வருமான வரிக்கான ஏற்பாடு ரூபா 1.6 மில்லியன் கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வருடங்களுக்கும் மேலான நிறுத்தி வைத்தல் வரிகளை வருமான வரிக்கு எதிராக ஈடுசெய்ய முடியாது என்பதால், 2022 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படும்போது இத்தவறு திருத்தப்படுவகற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி மற்றும் வருமான வரிக்கான ஏற்பாடு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | அறவிடமுடியாக் கடன் ஏற்பாடுகளுக்காக தெளிவான அடிப்படையொன்று பின்பற்றப்படாது கடன் பட்டோரில் 72 சதவீதமான அளவான ரூபா 23.7 மில்லியன் அறவிடமுடியாக் கடன்களாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | ஒவ்வொரு கடனாளிக்கும் தனித்தனியாக கடனாளி நிலுவைகளை மீட்டெடுப்பதில் நிச்சயமற்ற தன்மையை ஏற்படுத்துவதற்கு பதிலாக, அரசு நிறுவனங்கள், சங்கங்கள்/கூட்டமைப்புகள் மற்றும் தனியார் ஆகிய மூன்று முக்கிய துறைகள் தொடர்பாக அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு மற்றும் பதிவளித்தல் கொள்கை தயாரிக்கப்பட்டு, அதன்படி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன. | ஒவ்வொரு கடன்பட்டோரினதும் கடன்களை அறவிடுகின்ற இயலுமை பகுப்பாய்வு செய்யப்பட்டு அறவிட முடியாத மற்றும் ஐயக்கடன் ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வருடம் 1 முதல் 13 வரையான காலப்பகுதியில் பேணப்பட்டு வருகின்ற பெறுமதி ரூபா 22.3 மில்லியன் ஆன பெற வேண்டிய 63 வியாபார மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகை வசூலிக்கப்பட வேண்டிய நிறுவனங்களின் தலைவர்களிடம் அவ்வப்போது விவாதங்கள் மற்றும் நினைவூட்டல் கடிதங்கள் தெரிவிக்கப்பட்டு, எதிர்காலத்தில் இந்த நிறுவனங்களுக்கும் விழிப்புணர்வு அளிக்கப்பட்டு, இது தொடர்பான முன்னேற்றத்தை அறிவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும். | நீண்ட காலமாக காணப்படுகின்ற பெற வேண்டிய தொகையை விரைவில் அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

#### 1.6.2 செலுத்தப்பட வேண்டிய கணக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் விளையாட்டு மைதானம் மற்றும் நீச்சல் குளங்கள் போன்றவற்றின் முன்பதிவுகளின்போது பெறப்பட்டிருந்த மொத்தம் ரூபா 3.1 மில்லியன் ஆன மீள் செலுததப்படும் வைப்புக்கள் வருமானத்திற்கு தீர்க்கப்படவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2021.12.31 இல் இதற்கான மீதிகளை உறுதிப்படுத்துமாறு கடிதம் மூலம் கொடுக்கல் வாங்கல் செய்யப்பட்டோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. . | மீள் செலுததப்படும் வைப்புக்களை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.- |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டிக்கோவை 2006 இன் 1.2.1 (அ)பந்தி | சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் துப்புரவு செய்தல் ஒப்பந்த காலம் 2020 | பெறுகை செயல்பாட்டில் நடைமுறை சிக்கல்கள் இருப்பதால் | பெறுகை வழிகாட்டிக்கோவை பிரகாரம் செயற்படுத்த வேண்டும். |

| | |
|---|---|
| நவம்பர் 30, இல் முடிவடைந்த போதிலும், பெறுகை வழிகாட்டுதல்களின்படி பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு புதிய வழங்குநரைத் தேர்ந்தெடுக்காமல், 2022 செப்டம்பர் 30 வரை சேவைகள் பெறப்பட்டு அதற்காக மீளாய்வாண்டில் ரூபா 6.4 மில்லியன். செலவு செய்யப்பட்டது. | நிர்வாகச் சபைக்கு ஒரு விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி, தற்போது துப்புரவு செய்யும் நிறுவனத்திடம் இருந்து 2022.30.06 வரை துப்புரவு சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு நிர்வாகச் சபை அங்கீகாரம் அளித்துள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 18.3 மில்லியன் மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய வருடத்தின் பற்றாக்குறை ரூபா 75 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 93.3 மில்லியன் ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மூலதன மானியங்கள் ரூபா 119.5 மில்லியன் ஆனது ஆண்டின் வருமானமாக இனங்காணப்படட்டமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபைக்கு சொந்தமான ஆர்.பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானம் 2006 இலிருந்து காலாண்டிற்கு ரூபா 750,000 வீதம் நிலையான வாடகைக்கு 30 வருட குத்தகை காலப்பகுதிக்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது வருடாந்த வாடகை தற்போதைய சந்தைப் பெறுமதிக்கு ஏற்றவாறு அவ்வப்போது திருத்துவதற்காக குறிப்பிட்ட நிபந்தனை குத்தகை | இந்த ஒப்பந்தம் அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் என்பதால், நிர்வாக சபையின் கருத்து மற்றும் ஒப்பந்தத்தில் திருத்தம் செய்வதற்கான ஏனைய யோசனைகள் சட்டமா அதிபருக்கு தெரிவிக்கப்பட்டு, சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. | குத்தகை ஒப்பந்தம் திருத்தப்படுவகற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.- |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படாமையால் அதிகாரசபைக்கு நடப்பாண்டின் அடிப்படையில் குத்தகை வாடகை அறவிடப்பட முடியுமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | வருமானம் ஈட்டும் நோக்கத்திற்காக, சுகததாச வெளிப்புற விளையாட்டரங்கில் ஆர்தர் சில்வா மாவத்தையை நோக்கி நிர்மாணிக்கப்பட்ட 03 கடை அறைகளுக்கான மதிப்பிடப்பட்ட மாத வாடகை வருமானத்தின் தொகை ரூபா 113,000 ஆக இருந்தது. இந்தக் கடைகளை குத்தகைக்கு விடாததால், அதிகாரசபைக்கு வருடாந்தம் ரூபா 1,356,000 ஆன குத்தகை வருமானமொன்றை இழந்திருந்தது. | நிறுவனத்தின் இரண்டு அத்தியாவசிய காரணங்களுக்காக இரண்டு கடை அறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். | கடை அறைகளை உடனடியாக குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருமானம் ஈட்டுவதில் கவனம் செலுத்த வேண்டும். |
| (இ) | சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகாரசபையின் உள்ளக அரங்கம் வெளிப்புற விளையாட்டு அரங்கம் மற்றும் ஆர்.பிரேமதாச மைதானம் அமைந்துள்ள காணிகளின் உரிமை அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்காக 2022 செப்டெம்பர் 30 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த அதிகாரசபைக்கு காணிகளை கையளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. சில வருடங்களுக்கு முன்னர் இந்த அதிகார சபைக்கும், கொழும்பு பிரதேச தலைமைச் செயலகத்திற்கும், நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் இடையில் கடிதப் பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.<br><br>உரிய கோவைகளைக் கண்டறிநத பின்னர் எந்த கட்டத்தில் செயல்முறை நிறுத்தப்பட்டது என்பதைச் சரிபார்த்த பிறகு, நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் ஒருங்கிணைந்து அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | காணிகளின் உரிமை அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.- |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சுகததாச தேசிய விளையாட்டுத் தொகுதி அதிகார சபையின் பிரதான நீச்சல் குளம் மற்றும் சுழியோட்டக் குளம் ஆகியவற்றிற்காக நிறுவப்பட்ட நீர் சுத்திகரிப்பு அமைப்பில் மற்றும் சிறுவர் நீச்சல் தடாகத்தில் நீர் கசிவைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தினால் அதிகார சபையின் உள்ளக விளையாட்டரங்கின் 2021 ஆம் ஆண்டு நீர் கட்டணம் 71 சதவீதம் அதாவது ரூபா 3.8 மில்லியனாக அதிகரித்துள்ளது. | நீர் கசிவைத் தடுப்பது தொடர்பான திட்டத்தை மேற்கொள்வதற்காக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் பெறுகை நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன. எனினும், கொரோனா அனர்த்தம் மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி மற்றும் நிதியமைசசினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் காரணமாக, புதிய திட்டங்களை நிறுத்துமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட நிலையில், 2023 ஆம் ஆண்டிலேயே அதனை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது. தற்போது, மேற்கூறிய குறைபாடுகளை தடுக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நீர் கசிவைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படல் வேண்டும்.- |
| (உ) | அதிகாரசபையால் நிர்வாகப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்ற நுவரெலியா குதிரைப் பந்தய மைதானம் 2015 ஆம் ஆணடில் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், ரூபா 110,000 ஆன மாதாந்த வாடகைக்கு குதிரைப் பந்தயக் கழகம் ஒன்றிற்கு குத்தகைக்கு விடப்பட்டள்ளது. குறித்த சொத்தை 2018 ஆம் ஆண்டு முதல் 04 வருட காலத்திற்கு குத்தகை உடன்படிக்கையின்றி மற்றும் வாடகை செலுத்தாமல் குதிரைப் பந்தயக் கழகத்தினால் அனுமதியின்றி பயன்படுத்தியதன் காரணமாக, அதிகாரசபைக்கு பெறக்கூடிய கணிசமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. குதிரைக் கழகத்தினால் | ரோயல் குதிரைப் பந்தயக் கழகத்தினால் ஒப்பந்தங்களில் கையெழுத்திடல் தொடர்ந்து மறுக்கப்பட்டதாலும் அரசுக்குச் சொந்தமான சொத்துக்களை அங்கீகரிக்காமல் அனுபவித்ததாலும், அதிகாரசபைக்கு ஏற்பட்ட நிதி இழப்பைக் கருத்தில் கொண்டு, ரோயல் குதிரைப் பந்தயக் கழகத்திற்கு எதிராக் சட்ட நடவடிக்கை எடுக்க சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டமா அதிபரின் ஆலோசனை பெற்றவுடன், அரச குதிரை பந்தயக் கழகத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு அதிகாரசபைக்கு இழக்கப்பட்டிருந்த வருமானம் குறித்து | குத்தகை வருமானத்தை வசூலிப்பது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| எழுத்து மூல முன் அங்கீகாரம் பெறப்படாமல் குதிரைப் பந்தய மைதானத்தில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணங்கள் தொர்பாக அதிகாரசபையால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். | |

### 3.2 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டு பணிகள் தொடங்கப்பட்டு ரூபா 12.3 மில்லியன் செலவில் சுகததாச வெளி விளையாட்டரங்கின் சுற்றுச்சுவர் அமைப்பதல் மற்றும் ரூபா 31.7 மில்லியன் செலவிடப்பட்டு சுகததாச வெளிப்புற விளையாட்டரங்கின் பிரதான நுழைவாயில் மற்றும் இரும்பு வேலி நிர்மாணப்பணிகள் முறையே 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் இன்னும் பணிகள் நிறைவு பெறவில்லை. | ஒப்பந்ததாரரின் பலவீனமான ஒப்பந்த நிர்வாகத்தால் இச்செயற்திட்டம் தொடர்ந்தும் தாமதமானதுடன், இது குறித்து ஒப்பந்ததாரருக்கு பல கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டிருந்ததது. | நிர்மாணப்பணிகள் விரைவில் முடிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் சிரேஷ்ட நிலையில் 10 அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 04 வெற்றிடங்கள் காணப்பட்டன. மூன்றாம் நிலையில் 03 பதவிகளுக்கான 03 வெற்றிடங்கள், இரண்டாம் நிலையில் 03 பதவிகளுக்கான 08 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப நிலையில் 05 பதவிகளுக்கான 09 வெற்றிடங்கள் காணப்பட்டன.அத்துடன் சிரேஷ்ட நிலையில் ஒரு பதவி, மூன்றாம் நிலையில அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் ஒரு பதவி, இரண்டாம் நிலையில் 03 பதவிகள் மற்றும் ஆரம்ப | அதிகாரசபையின் பதவியணியில் காணப்படுகின்ற வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு மற்றும் மிகைகளை முறைப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | அதிகாரசபையின் செயலாற்றலுக்கு உதவும் வெற்றிடங்களை நிரப்பப்படுவதற்கு மற்றும் பதவியணியின் தேவைக்கு ஏற்ப ஆட்சேர்ப்பு நடைமுறையை திருததுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

நிலையில் 05 பதவிகள் உட்பட மொத்தம் 10 பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையொன்றை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் அதிகாரசபையின் பதவியணியில் 19 வெற்றிடங்கள் காணப்பட்டன. மேலும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் இரண்டாம் நிலையில் மற்றும் ஆரம்ப நிலையில் 06 பதவிகளுக்காகக் காணப்பட்ட 23 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தது.